**Judicial Form No.53**

**(See Rule 42)**

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII, Cr.P.C.)**

**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE OF WATRAP**

**C.C. No: 187 of 2024**

**DATE : 06.11.2025**

**Depositions of witness for Prosecution**

**PW: 8**

| | | | |
|---|---|---|---|
| **Name** | முனியாண்டி | **Caste** | |
| **Father/ Husband's Name** | முருகன் | **Calling** | ஆய்வாளர் |
| **Village** | | **Religion** | |
| **Taluk** | | **Age** | |

**Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 06th day of November 2025**

1 மற்றும் 3, 4 எதிரிகள் ஆஜர். 2 ம் எதிரி இறந்துவிட்டார். வழக்கறிஞர் திரு.கதிரேசன் ஆஜர்)

**<u>முதல் விசாரணை</u> –**

நான் தற்போது சிவகாசி உட்கோட்டம் மாரனேரி காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 15.07.2015 அன்று கூமாபட்டி காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக நிலைய பொறுப்பில் இருந்த பொழுது மதியம் 12.00 மணிக்கு கூமாபட்டி பள்ளிவாசல் தெருவை சேர்ந்த ஜியாவுதீன் என்பவர் நிலையம் கொடுத்த புகார் மனுவினை பெற்று அதன் தன்மைக்கேற்ப நி.கு.எண்.75/2015, சட்டப்பிரிவுகள் 294(b). 323 இதச மற்றும் பிரிவு 3 TNPPDL Act ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ. 7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** அதன் பின்னர் வழக்கினை எனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டு அன்றைய தேதியில் மதியம் 12.45 மணிக்கு மற்றும் 13.45 மணிக்கு சம்பவ இடங்கள் சென்று சாட்சிகள் இதயத்துல்லா, ஷேக் முகமது ஆகியோர்கள் முன்னிலையில் பார்வை

மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். **மாதிரி வரைபடங்கள் முறையே அசா. ஆ. 8 மற்றும் அசா. ஆ. 9 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

பின்னர் 14.15 மணிக்கு வழக்கின் சம்பவ இடத்தில் உடைக்கப்பட்ட சொத்துக்கள் ஆன பிளாஸ்டிக் பைப்புகளை சாட்சிகள் முன்னிலையில் அத்தாட்சியில் கைப்பற்றினேன். **அத்தாட்ச்சி அ.சா.ஆ. 10 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் இவ்வழக்கின் சாட்சிகளான ஜியாவுதீன், யூசுப் அன்சாரி, யாசின் முகமது, இதய துல்லா, ஷேக் முகமது ஆகியோர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் வழக்கின் எதிரிகளில் கம்பத்து மொட்டை சாகுல் ஹமீது, காஜா, முஸ்தபா ஆகியவர்களை அன்றைய தேதியில் 17.45 மணிக்கு கூமாபட்டி அரசு மேல்நிலைப் பள்ளி அருகில் வைத்து கைது செய்து நிலையம் கொண்டு வந்து நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன். வழக்கின் புலன் விசாரணையை மேல்விசாரணைக்காக வத்திராயிருப்பு வட்ட காவல் ஆய்வாளர் அவர்களின் பார்வைக்கு வைத்தேன். இது சம்பந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை –**

புகாரில் யார் யாரை தாக்கினார்கள் என்று குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்று சொன்னால் புகார்தாரரை எதிரிகள் ஒன்று சேர்ந்து தாக்கியதாக குறிப்பிட்டு சொல்லப்பட்டுள்ளது. புகாரில் யார் எதை வைத்து தாக்கினார்கள் என்று குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்று சொன்னால் சரிதான். என்னுடைய புலன் விசாரணையில் புகார்தாரை எந்த எதிரிகள் எதை வைத்து தாக்கினார்கள் என்று சொல்லியுள்ளார். புகாரில் எதிரிகள் புகார்தாரரை உடம்பில் எந்த பகுதியில் தாக்கி காயம் ஏற்படுத்தினார்கள் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான். ஆனால் என்னுடைய புலன் விசாரணையில் புகார்தாரர் அவருடைய உடம்பில் எந்த பகுதியில் காயம் ஏற்பட்டது என்று குறிப்பிட்டு சொல்லியுள்ளார். புகாரில் யார் யாரை திட்டினார்கள் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்று சொன்னால் எதிரிகள் ஒன்று சேர்ந்து திட்டியதாக குறிப்பிடப்பட்டுள்ளது. தனிப்பட்ட முறையில் எந்த எதிரிகளையும் குறிப்பிட்டு திட்டியதாக சொல்லப்படவில்லை என்று சொன்னால் புலன் விசாரணையில் சொல்லியுள்ளார்கள். புகாரில் தேதி மற்றும் நேரம் இடைச்சொற்களாக எழுதப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். அது காலையா அல்லது இரவா என்று குறிப்பிட்ட சொல்லப்படவில்லை என்று சொன்னால் புகார்தாரா் விசாரணையில் குறிப்பிட்டு

சொல்லியுள்ளார். புகாரில் புகார்தாரருக்கு எந்த இடத்தில் அவருக்கு சொந்தமான தோட்டம் உள்ளது என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான் ஆனால் என்னுடைய விசாரணையில் சொல்லி உள்ளார்.

புகாரில் வழக்கு சம்பவத்தை கண்ணுற்ற சாட்சிகள் யாரும் பார்த்ததாக சொல்லப்படவில்லை என்று சொன்னால் சரிதான் ஆனால் விசாரணையில் சொல்லியுள்ளார். புகாரில் 1வது எதிரி தைக்கா பஜாரில் இருந்ததாகவோ அல்லது யாரையும் தாக்கியதாகவும் குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்று சொன்னால் சரிதான். புகார்தாரருக்கு சொந்தமான சொத்தை சேதப்படுத்தியதை கண்ணுற்ற சாட்சிகள் யாரும் பார்த்ததாக புகார் மனுவில் சொல்லப்படவில்லை என்று சொன்னால் சரிதான் ஆனால் என்னுடைய விசாரணையில் சொல்லியுள்ளார். முதல் தகவல் அறிக்கையில் வழக்கு சம்பவம் நடைபெற்ற நாள் 15.07.2015ம் தேதி 10 மணி என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். குற்றச் சம்பவம் நடைபெற்ற இடத்தில் இருந்து காவல் நிலையம் அரை கிலோமீட்டர் தூரத்தில் உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். சம்பவ இடத்திலிருந்து காவல் நிலையத்திற்கு நடந்து வந்தால் 15 நிமிடத்தில் வந்து விடலாம் என்று சொன்னால் நபரின் உடல் நிலையை பொறுத்து மாறுபடும்.

சாட்சி ஜியாவுதீன் என்னுடைய விசாரணையில் இரவு யாரோ அவருக்கு சொந்தமான போரை அடித்து நொறுக்கி விட்டார்கள் என்று சொல்லியுள்ளார் என்றால் சரிதான். அதன் பின்பு விசாரணையின் தொடர்ச்சியாக, தனது தோட்டத்தில் உள்ள போரை சேதப்படுத்திய நபர்களின் பெயர்களை குறிப்பிட்டு சொல்லி உள்ளார். புகாரில் சாட்சி ஜியாவுதீனுடன் மற்ற நபர்கள் இருந்ததாக குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். ஆனால் புலன் விசாரணையில் தன்னுடன் இருந்த நபர்கள் பற்றி சொல்லியுள்ளார். சாட்சி ஜியாவுதீன் என்னுடைய விசாரணையில் யார் யாரை எந்தெந்த இடத்தில் தாக்கினார்கள் என்றும் யார் எந்தெந்த தகாத வார்த்தையால் பேசினார்கள் என்றும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான் ஆனால் எதிரிகள் ஒன்று சேர்ந்து தாக்கியதாக சொல்லியுள்ளார். இந்த வழக்கில் வழக்கு சம்பவமானது காஜாமைதீன் பெட்டிக்கடைக்கு அருகே வைத்து நடைபெற்றதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் முதல் தகவல் அறிக்கையில் தைக்காபஜார் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. வழக்கில் மாதிரி வரைபடத்தில் வழக்கு சம்பவம் காஜா மைதீன் பெட்டி கடைக்கு முன்பு மண்ரோட்டில் வைத்து நடைபெற்றதாக காட்டப்பட்டுள்ளது. காஜாமைதீன் என்பவரை விசாரித்து இந்த வழக்கில் வாக்குமூலம் பதிவு

செய்யப்படவில்லை என்று சொன்னால் அந்த விபரம் காவல் ஆய்வாளருக்கு தான் தெரியும். நான் இந்த வழக்கில் சாட்சிகளை விசாரணை செய்யவில்லை என்றால் மூன்று சாட்சிகளை மட்டும் தான் விசாரணை செய்தேன். இந்த வழக்கில் மாதிரி வரைபடம் தயார் செய்தது யார் என்றால் நான் தான் தயார் செய்தேன். அந்த சமயத்தில் அருகில் இருந்த சாட்சிகளை நான் விசாரணை செய்யவில்லை என்று சொன்னால் மாதிரி வரைபடம் தயார் செய்யும் பொழுது சம்பவ இடத்தில் மாதிரி வரைபட சாட்சிகளை தவிர மற்ற சாட்சிகள் யாரும் இருந்ததாக எனக்கு ஞாபகம் இல்லை.

இந்த வழக்கில் சாட்சிகளின் வாக்குமூலங்கள் மடிக்கணினியில் தட்டச்சு செய்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால். வழக்கு விசாரணைக்காக மடிக்கணினியை உடன் எடுத்து சொல்வது வழக்கம். ஆனால் சாட்சிகள் யாரும் வாக்குமூலங்கள் மடிக்கணினியில் பதிவு செய்ததாக குறிப்பிட்டு சொல்லவில்லை என்று சொன்னால் அவ்வாறு சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. நான் விசாரணையின் பொழுது மடிக்கணினியை எடுத்துச் செல்லவில்லை என்றும், வழக்கிற்காக எடுத்துச் சென்றதாக பொய்யாக சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல. சேதமடைந்ததாக சொல்லப்படும் பிளாஸ்டிக் பைப்பின் அளவுகள் குறித்து நான் குறிப்பிட்ட சொல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல சொல்லியுள்ளேன். பிளாஸ்டிக் பைப்பின் தடிமனையும் அதனுடைய வண்ணத்தையும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்று சொன்னால் நீளம் குறிப்பிடப்பட்டுள்ளது, விட்டத்தை அளவீடு செய்ய சம்பவ இடத்தில் எவ்வித சாத்தியக்கூறும் இல்லை. நான் எந்த தேதியில் என்னுடைய விசாரணையை முடித்து மேல்விசாரணைக்காக காவல் ஆய்வாளர் பார்வைக்கு சமர்ப்பித்தேன் என்றால் 15.07.2015. இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் மற்றும் அத்தாட்சி 07.10.2016 அன்று நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் சொன்ன நாள் நேரம் மற்றும் இடத்தில் வைத்து எதிரிகளை கைது செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் சொன்ன விதத்தில் வைத்து சாட்சிகளை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்யப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கில் தயார் செய்யப்பட்டுள்ள பார்வை மகஜர், மாதிரி வரைபடம் மற்றும் அத்தாட்சிகள் ஒரு வருடம் கழித்து நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது என்று சொன்னால் நீதிமன்ற ஆவணத்தை பார்வையிடுகையில் ஒரு வருடம் கழித்து தான் நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது.

மசூதியில் தொழுகை செய்வதில் ஏற்பட்ட பிரச்சினை சம்பந்தமாக தான், 1வது எதிரி மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் உத்தரவு பெற்றதான், அதன் அடிப்படையில் காவல் நிலையத்தில் விசாரணை செய்து 1வது எதிரி மசூதியில் தொழுகை செய்ய அனுமதிக்கப்பட்டார் என்று சொன்னால் வழக்கு சம்பவம் நடைபெற்ற பின்னர் தான் அது பற்றி எனக்கு தெரியும். வழக்கின் ஆவணங்கள் பார்வை மகஜர், மாதிரி வரைபடம் மற்றும் அத்தாட்ச்சி காவல் நிலையத்தில் வைத்து வழக்கிற்காக பின்னிட்டு தயார் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. நான் சரியாக புலன் விசாரணை செய்யாமல் எதிரிகள் மீது பொய்யாக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. வழக்கின் எதிரிகள் எந்த வழக்கு சம்பவத்திலும் ஈடுபடவில்லை என்று சொன்னால் சரியல்ல.

**மறு விசாரணை** இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல நான் சொல்ல தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு எதிரியின் முன்னால் சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு அவரால் ஒத்துக்கொண்டு கையெழுத்திட்டுள்ளார்.

ஒப்பம்.ராமநாதன்
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
வத்திராயிருப்பு